# Kunalai from a Literary Generic Perspective: Performing Art to a Literary Form

**N. Bharani**
*Ph.D. Research Scholar (Full-Time), Tamil P.G.& Research Department*
*Ethiraj College for Women,Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981526

**Abstract**
*In Tamil studies, the research on literary genres serves as a vital tool for analyzing thehistory of Tamil literature. Over the time, thematic concerns and literary forms shifted alongside political changes social structure. Grammatical texts known as 'Paattiyal'serving as rule bookemerged specifically to record these literary genres. Various folk games and arts—such as Ammanai, Vallaipattu, and Kuravai—have transformed into literary genres in time. This article does adescriptive study to identify the history of a performing art form 'Kunalai' and its transformation into a literary genre. The objective of this study is to provide literary references on KunalaiKoothu and present evidences of its emergence as a distinct literary form.*
***Keywords:*** *Literary Genres, Folk Art, Performing Arts, Kunalai, Tattuvarayar, Paduthurai*

**References**
1. Arunachalam, Mu., Tamil Ilakkiya Varalaru (PathinainthamNootrandu), Gandhi Vidyalayam, Mayuram, 1969.
2. Arunachala Mudaliar (Ed.), Paaduthurai, Athikalanithi Press, Chennai, 1947.
3. Kathiraivel PillaiNa., Tamil Mozhi Agarathi (Sembathippu), Saradha Pathippagam, Chennai, 4th Edition, 2009.
4. Swaminatha Iyer, U.V. (Ed.), Silappathigara Moolamum Arumpathavuraiyum Adiyarkkunallar Uraiyum, U. Ve. Swaminatha Iyer Library, Chennai, 12th Edition, 2013.
5. Subramanian S.V., Tamil Ilakkiya VakaiyumVativum, Tamil Patippakam, Chennai, 1984.
6. Pattusami Othuar, T., Thirutthondar Puranam Endru Vazhangukira Periyapuranam, Sri Kasi Mutt, Thiruppanandal, 1950.
7. Brahmananda Swamy (Comm.), Anjavathai Bharani MoolamumUraiyum, Anandasramam, Kumarapalayam, 1980.
8. Varatharajan, Mu., Tamil Ilakkiya Varalaru, Sahitya Akademi, Chennai, 34th Edition, 2021.
9. dsal.uchicago.edu (Digital Dictionaries of South Asia)
10. https://sangampedia.net/thodaradaivugal/

# இலக்கிய வகைப்பாட்டியல் நோக்கில் குணலை: நிகழ்கலை வடிவமும் இலக்கியப் படைப்பாக்கமும்

***ந. பரணி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
தமிழ் முதுகலை (ம) உயராய்வுத்துறை
எத்திராஜ் மகளிர் கல்லூரி, எழும்பூர், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழியல் ஆய்வுகளில் இலக்கிய வகைகள் குறித்தான ஆய்வுகள் இலக்கிய வரலாற்றின் நெடும்பாதையைப் பகுத்தறிவதற்குப் பெரும் துணை செய்கின்றன. அரசியல், சமூகம் ஆகியவற்றின் மாறுதல்களுக்கு ஏற்ப ஓவ்வொரு காலத்திலும் பாடுபொருள்கள் மற்றும் இலக்கிய வடிவங்களில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலக்கிய வகைகளைப் பதிவுச் செய்யும் பொருட்டு பாட்டியல் நூல்கள் தோன்றி அவற்றிற்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. அம்மானை, வள்ளைப்பாட்டு, குரவை போன்ற பல நாட்டார் விளையாட்டுகள் மற்றும் கலைகள் இலக்கியமாக வடிவெடுத்துள்ளன. இக்கட்டுரை விளக்கமுறை ஆய்வின் வழி குணலை என்ற நிகழ்கலை வடிவம் இலக்கியமாக முகிழ்ந்த வரலாற்றை அடையாளப்படுத்த முற்படுத்துகிறது. குணலை கூத்து குறித்த இலக்கிய குறிப்புகளை வழங்குவதோடு அவ்வடிவம் இலக்கிய வகையாக உருபெற்ற சான்றுகளை எடுத்துரைப்பது ஆய்வின் நோக்கமாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *இலக்கிய வகை, நாட்டார் கலைகள், நிகழ் கலைகள், குணலை, தத்துவராயர், பாடுதுறை.*

***முன்னுரை***

பாடு பொருள், பாடல் எண்ணிக்கை, அமைப்பு, யாப்பு, நாட்டார் கலைகள் எனப் பல்வேறு அடிப்படைகளில் இலக்கிய வகைகள் பகுக்கப்பெறுகின்றன. மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றதும், அவர்களின் பண்பாடு, உணர்வு, வாழ்வியல், நம்பிக்கையோடு நெருங்கிய தொடர்புடையதுமாகிய நாட்டார் விளையாட்டுகள், கூத்துகள், இசை, கதைப் பாடல்கள் எனப் பல்வேறு நிகழ்கலைகள் இலக்கிய வடிவம் பெறுகின்றன. மக்களிடையே வழக்கிலிருந்து மறைந்த பல கலைகள் இலக்கிய வகைகளாக உருபெற்று உலா வருவதனால் அவை பண்பாட்டுக் கூறுகளை அறிய வாய்ப்பளிக்கிறது. இக்கட்டுரை குணலை என்னும் கூத்து பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைப் பதிவுச் செய்து, அது பிற்காலத்தில் தனித்ததொரு இலக்கிய வகையாக எழுந்ததை ஆவணப்படுத்துவதாக அமைக்கப்பெற்றுள்ளது.

**குணலை - சொற்பொருள்**

குணலை என்பதற்கு ஒரு கூத்து, வீராவேசத்தாற் கொக்கரித்தல், கைத்தட்டிக் கூவுதல் (கதிரவேல் பிள்ளை, *2009:482)* ஆரவாரத்துடன் நடிக்கும் கூத்து,

நாணத்தால் உடல் வளைகை, கொக்கரித்தல், இரைந்து கூத்தாடுதல் (தமிழ் லெக்சிகன், *2023:983);* குணாலம்- ஒரு வகை மகிழ்ச்சிக் கூத்து (தமிழ் லெக்சிகன், *2023:984)* என அகராதிகள் குறிப்பிடுகின்றன.

**இலக்கியப் பதிவுகள்**

தேவாரம், பெரியபுராணம், திருப்புகழ் போன்றவற்றுள் குணலை ஆடுதல் குறித்த செய்திகள் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன.

> **“கொங்கையர் குழாம் குணலைசெய் கோட் டூர் நற்கொழுந்தே” *(சம்.தேவா. 2649/3)***

*திருகோட்டூர் தலத்தின் சிறப்பைப் பாடும் இப்பகுதி அவ்வூரில் உள்ள மங்கையர் ஒன்றுகூடி மகிழ்ச்சியில் குணலை ஆடினர் என்கிறது.*

**"கொடிகொள் செல்வ விழாக் குணலை அறா" (அப்.தேவா.1386/ 1)**

அப்பரின் தேவாரத்தில் வரும் மேற்கண்ட வரிகள் திருபூந்துருத்தி தலத்து இறைவனைப் பாடுகிறது. கொடிகள் கட்டப்பெற்று செல்வ செழிப்போடு ஆரவாரத்துடன் விழாக் கோலம் பூண்டு காஞ்சி நகர் காட்சியளிக்கும் என்கிறார் நாவுக்கரசர். காஞ்சிபுரத்தில் கண்ட இறைவரை நினைவுப்படுத்தி அங்குள்ள இறைவரும் பூந்துருத்தி சிவப்பெருமானும் ஒருவரே எனப் பாடுகிறார். இங்குக் குணலை என்பது கூத்தைக் குறிக்காது "விழாக் குணலை அறா" என்று திருவிழாக்களில் மக்கள் இடைவிடாது மகிழ்ச்சியில் எழுப்பும் ஆரவார ஒலியைக் குறிப்பிடுகிறது.

**"மலர்மழை பொழிந்தது எங்கும் வான துந்து பியின் நாதம்**
**உலகு எலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் - தாமும்**
**குலவினர் கணங்கள் எல்லாம் குணலை இட்டன..."**
**(காரைக்கால் அம்மையார் புராணம் 52)**

மேற்கண்ட பாடல் பெரியபுராணத்தில் காரைக்கால் அம்மையார் புராணத்தில் இடம்பெருகிறது. அம்மையார் பேய் வடிவம் எடுத்த அதிசயத்தைக் கண்ட கணங்கள் விண்ணுலகில் இருந்து மலர் மழை பொழிந்தன. துந்துபிகளின் ஓசை விண்ணெங்கும் நிறைந்து ஒலித்தது. வானவரும் முனிவர்களும் மகிழ்ச்சியில் குலவி ஒலி எழுப்பி குணலை இட்டு கூத்தாடினர் என்கிறது. குணலையானது ஒரு வகை மகிழ்ச்சிக் கூத்து என்பதனையும் அது வாயிலிருந்து ஒலி எழுப்பி ஆரவாரத்துடன் ஆடப்பெறும் என்றும் இப்பதிவுகளின் வழி அறியப்பெறுகிறது.

## சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை

சிலப்பதிகாரத்திற்கு 12ஆம் நூற்றாண்டில் அடியார்க்கு நல்லாரால் இயற்றப்பெற்ற உரையில் அரங்கேற்றுக் காதையில் பலவகையான பாடல்கள், கூத்து வகைகள் சுட்டப்பெறுகின்றன. வரி எட்டு வகைப்படும் என எண்வகை வரிகளைச் சுட்டியப்பின், "இவ்வரியென்பதனைப் பல்வரிக்கூத்து என்பாருமுளர்" (உ.வே.சா, 2013: 88) என்று பல்வரிக்கூத்து களை ஒரு நீண்ட பாடலில் குறிப்பிடுகிறார்.

**".. குந்திவரும் பாரன் குணலைக்கூத் - தந்தியம்போ**
**தாடுங் களிகொய்யு முள்ளிப்பூ வையனுக்குப்**
**பாடும்பாட் டாடும் படுபள்ளி - நாடறியும்**
**கும்பீடு நாடங் குணாட்டங் குணாலையே"**
**(உ.வே.சா, 2013: 88)**

பல்வரிக்கூத்தினைக் குறிப்பிடும் இப்படாலில் "குந்திவரும் பாரன் குணலை" என குணலையும் குறிப்பிடப்பட்டுள்ளது நோக்குதற்குரியது. மேலும் குணாலை என்னும் கூத்து தனியே சுட்டப் பெற்றிருப்பதால் இரண்டும் வேறு வேறானவை என்பதும் தெளிவாகிறது.

## பரணி உறுப்பாகக் குணலை கூத்து

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரான தத்துவராயர் அத்வைத வேதாந்தத்தைப் பாடு பொருளாகக் கொண்டு தமிழில் பல்வேறு இலக்கியங்களைப் படைத்தளித்துள்ளார். வெகுஜன மக்கள் மொழியல்லாத வடமொழியிலேயே வேதம், வேதாந்தம் சார்ந்த செய்திகள் அறியப்பட்டு வந்த நிலையில் அத்வைத நெறியைத் தமிழ் இலக்கியத்தின் வழி பாமர மக்களுக்கும் கொண்டு சேர்க்க முயன்றவராகப் போற்றப்படுபவர் தத்துவராயராவார். அடங்கன் முறை (18 நூல்களை அடக்கியது), பாடுதுறை (பல்வேறு இலக்கிய வகைகளில் அமைந்துள்ள பாடல்கள்), வடமொழியிலுள்ள ஈசுவர கீதையைத் தழுவி தமிழில் ஈசுவர கீதை, பிரம்ம கீதை ஆகியவற்றை இயற்றியுள்ளார். தமிழ் மொழியில் வேதாந்த மார்கத்திற்கு மூலக் கர்த்தர் இவரே, என மு. அருணாச்சலமும் இலக்கிய வடிவங்களையும் நாட்டுப்பாடல் வடிவங்களையும் பயன்படுத்தித் தத்துவக் கருத்துகள் அமைந்த பல பாடல்களைப் பாடியவர் தத்துவராயர் என்பவர். அவர் போல் வேறு யாரும் அத்தனை வடிவங்களைப் பயன்படுத்தியவர்கள் இல்லை எனலாம், என்று மு. வரதராசனாரும் குறிப்பிடுகின்றனர். இவரே குணலை என்னும் கூத்தினை முதன்முதலில் இலக்கிய வகையாகப் படைத்துள்ளார்.

அடங்கன் முறையினுள் உள்ள அஞ்ஞவதைப்பரணி முற்றிலும் உருவகமாக அமைந்த பரணி நூலாகும். அஞ்ஞானத்தை அஞ்ஞவேந்தனாகவும் ஞானத்தை ஞான வேந்தனாகவும் உருவகப்படுத்தி குருவின்

ஞானத்தினால் அஞ்ஞானம் அழிந்ததாக நூல் அமைக்கப்பெற்றுள்ளது. பரணி இலக்கியத்தினைப் புது பொலிவூட்டி புதிய உறுப்புகளைச் சேர்த்த தத்துவராயர் குணலை வாழ்த்து பகுதியை ஆக்கியுள்ளார். குருவின் ஞானத்தினால் அஞ்ஞானம் அழிந்ததைப் போற்றி "தோத்திரமாகிய குணலை வாழ்த்து" என்பதனை இறுதி உறுப்பாக அமைக்கிறார் ஆசிரியர். இதில் 20 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**"மதியிலி யாவுழல் கின்றநம்மை**
**மாநுட னாயவ னாளவந்த**
**வதிசய மேநினைந் தாடீரே**
**யார்த்தெழுந் தார்த்தெழுந் தாடீரே."**
**(அஞ்ஞ.பரணி 477)**

ஆத்ம ஞானமின்றி பிறப்பு, இறப்பு என்னும் சுழலில் உழலுகின்ற நம்மை மானிடராய் குரு வடிவு எடுத்து தடுத்தாட்கொண்ட அதிசயத்தை நினைத்து ஆரவாரித்து ஆடுவீர் என மேற்கண்ட பாடல் பொருள் தருகிறது.

**"மதமதென விழிசொரிய மயிர்புளகம் வரவே**
**குதுகுதுதென வுளமுருகு குணலைபல பலவே."**
**(அஞ்ஞ.பரணி 481)**

கண்களிலிருந்து நீர் சொரிய, மயிர் சிலிர்க்க குது குதுவென ஆர்பரித்து உளம் உருகி கைதட்டி பலவிதமாகக் குணலை ஆடுவதாகப் புலவர் பாடுகிறார். மதமதென (உணர்ச்சி வயப்படுதல்), குதுகுதுதென (மகிழ்ச்சியில் துள்ளுதல்), ஆர்த்தெழுந்து ஆடீரே, நாநா விதப்பட நாட்டம் இட்டு (பலவிதமான நடனங்கள்) என இப்பகுதியில் இடம்பெறும் சொற்கள், உணர்ச்சிக் குறிப்புகள், ஒலிக் குறிப்புகள் ஆகியவை குணலை கூத்தானது வெற்றியைத் தொடர்ந்து மன எழுச்சியின் காரணமாக பரவசத்துடன் ஆடப்பெறும் நிகழ்கலை என்பதனையும் நிகழ்த்தப்பெறும் சூழலையும் ஆடுவோரின் மனக்கோலத்தையும் வெளிப்படுத்துகிறது.

### பாடுதுறையுள் குணலை

பல்வேறு இலக்கிய வகைகளில் பாடல்களை உள்ளடக்கிய பாடுதுறையில் குணலை என்னும் தலைப்பு இருமுறை இடம்பெற்றுள்ளது. மொத்தம் 8 பாடல்கள் காணக்கிடைக்கின்றன.

**... நாவார வோதிய நாமவே தங்களு**
**நமக்கினி யமையுமென் றிடுகுணலை**
**நம்மில்வே றிலையெனுந் தன்மை யதும்போக**
**நாமேநா மானோமென் றிடுகுணலை.**
**(பாடுதுறை, குணலை 1)**

வேத நூல்களைக் கற்று அறியும் ஞானம் போதும். இறைவன் வேறு, நான் வேறு அல்ல; "நானே கடவுள்" என்ற நிலையையும் கடந்து அதனில் நின்ற "நானும்" அழிந்து இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட நிலை பாடப்பெற்றுள்ளது. அந்த உணர்வெழுச்சியில் மகிழ்ச்சியோடு குணலை கூத்தாடுக என்கிறது இப்பாடல். ஆத்ம ஞானம் அடைந்த பேரின்பத்திலும் தனது குரு சொரூபானந்தரின் கருணையினால் ஞானம் கிட்டியதைப் போற்றியும் குணலை பாடல்கள் பாடப்பெறுகின்றன.

பரணியின் குணலை வாழ்த்துப் பகுதியிலுள்ள பாடல்களின் எண்ணிக்கையை விட பாடுதுறையில் குறைவாகவே காணப்பெறுகின்றன. பாடு பொருள் நுகர்வோரைச் சரியாகச் சென்றடைய அதனை வெளிபடுத்தும் ஊடகம் மிக அவசியமாகிறது. பக்தி, தத்துவம் என உணர்வுகளோடும் ஆழ்மனத் தேடலோடும் தொடர்புடைய பொருளை, எளிமையாகப் பாமர மக்களிடம் கொண்டு சேர்க்க எண்ணிய தத்துவராயர் அவர்களது பண்பாட்டோடும் உணர்வுகளோடும் நெருங்கிய தொடர்புடைய நாட்டார் கலை வடிவங்களை மிக நுட்பாகத் தேர்ந்தெடுத்துக் கையாண்டுள்ளார். தத்துவராயரே முதன்முதலில் குணலையை அஞ்ஞவதைப் பரணியில் இலக்கியத்தின் உறுப்பாகவும் பாடுதுறையில் அதனைத் தனியே வகைமையாகவும் கையாண்டுள்ளார்.

### முடிவுரை

**ஆய்வின் வழி அறிய வரும் முடிவுகளாவன:**

இவ்வாய்வு தமிழின் சிற்றிலக்கிய களஞ்சியத்தினுள் குணலையை ஆவணப்படுத்துகிறது. குணலை கூத்தின் முக்கிய கூறுகளாகக் கைக்கொட்டுதல், உணர்ச்சிப் பொங்க எழுந்து ஆடல், வாயில் ஒலி எழுப்புதல் ஆகியவை சுட்டப்பெறுகின்றன. இலக்கியச் சான்றுகள் இதனை மகிழ்ச்சிக் கூத்து என்ற வகையில் வெகுசில இடங்களில் சுட்டியுள்ளன.

குணலை என்ற நிகழ்கலை இன்று எங்காவது நிகழ்த்தப்படுகிறதா? வேறு ஏதும் பரிணாமம் எடுத்துள்ளதா? யாரால் நிகழ்த்தப்பெறுகிறது? போன்ற கேள்விகளுக்கு நாட்டார் கலைகள் குறித்தான கள ஆய்வுகள் விடையளிக்கலாம்.

குணலை கூத்தினை முதன்முதலாக இலக்கிய வகையாகத் தத்துவராயர் தனது நூலில் பயன் படுத்தியதை அறிய முடிகிறது. குணலையைப் போன்று அடியார்க்கு நல்லார் பல்வரிக்கூத்தாகக் குறிப்பிடும் பாம்பாட்டி, பகடி, பகவதி போன்ற பல கலைகளைத் தத்துவராயர் தனது நூல்களில் இலக்கியமாக்கியுள்ளார். தசாங்க உறுப்புகளுள் ஒன்றான சின்னப்பூ வெண்பாவை தனியொரு சிற்றிலக்கிய வகையாகக் கையாண்டவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. வகைப்பாட்டியல் ஆய்வில் மேலாய்வுக் களமாக இவ்விலக்கிய வகைமைகள் குறித்த ஆய்வுகளை நிகழ்த்த வேண்டிய தேவையையும் இவ்வாய்வு உணர்த்துகிறது.

### சான்றுப் பட்டியல்


1. அருணாச்சலம் மு., தமிழ் இலக்கிய வரலாறு (பதினைந்தாம் நூற்றாண்டு), காந்தி வித்யாலயம், மாயூரம், 1969.
2. அருணாச்சல முதலியார் (தொ.ஆ.), பாடுதுறை, ஆதிகலாநிதி அச்சுக்கூடம், சென்னை, 1947.
3. கதிரைவேற்பிள்ளை நா., தமிழ் மொழி அகராதி (செம்பதிப்பு), சாரதா பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, 2009.
4. சாமிநாதையர் உ.வே (ப.ஆ)., சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்,உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, பன்னிரெண்டாம் பதிப்பு, 2013.
5. சுப்பிரமணியன் ச.வே., தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை,1984.
6. பட்டுச்சாமி ஓதுவார் தி., பெரியபுராணம் என்றுவழங்குகிறதிருத்தொண்டர்புராணம், ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள், 1950.
7. பிரம்மானந்த சுவாமி (உ.ஆ.), அஞ்ஞவதைப்
8. பரணி மூலமும் உரையும், ஆனந்தாஸ்ரமம், குமாரபாளையம், 1980.
9. வரதராசன் மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, சென்னை, முப்பத்தி நான்காம் பதிப்பு, 2021.
10. https://dsal.uchicago.edu/dictionaries/ (Digital Dictionaries Of South Asia)
11. https://sangampedia.net/thodaradaivugal/